
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

நகராட்சியில் அனுமதி பெற்ற வாகனம்
ராஜா 24 HOUR SERVICE
செப்டிக் டேங்க்
கிளீனிங் சர்வீஸ்
குறைந்த செலவில்
சுத்தம் செய்து தருகிறோம்

63748 77947, 81480 84081

| Vol: 02 | Issue: 261 | 4 Pages | 19.4.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 261 | 4 பக்கங்கள் | 19.4.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு**

**விளக்கம்:**
தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லையாகையால் ) எமனை வெல்லுதலும் கைகூடும்.

## ராகுல் காந்தி அமெரிக்காவில் 2 நாட்கள் சுற்றுப்பயணம்



புதுடெல்லி, ஏப்.19

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வருகிற 21 மற்றும் 22ந் தேதிகளில் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்த பயணத்தின்போது ரோட் தீவில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகத்தில் அவர் உரையாற்றுகிறார். மேலும் அங்குள்ள பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடனும் கலந்துரையாடுகிறார்.

முன்னதாக ரோட் தீவில் வெளிநாடுவாழ் இந்தியர்களை சந்திக்கும் ராகுல் காந்தி, இந்திய சர்வதேச காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களையும் சந்திக்க உள்ளதாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பவன் கெரா தெரிவித்தார்.

## மத்திய பிரதேசம்: கணவனை கொன்று கள்ளக்காதலனிடம் வீடியோ காலில் பேசிய மனைவி

போபால், ஏப. 29

மத்திய பிரதேச மாநிலம் புர்ஹான்பூர் பகுதியை சேர்ந்த ராகுல்(வயது 25) என்பவருக்கு கடந்த 4 மாதங்களுக்கு முன்பு 17 வயதான மைனர் பெண்ணுடன் திருமணம் நடைபெற்றது. ஆனால் அந்த பெண் யுவராஜ் என்ற நபரை காதலித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், திருமணத்திற்கு பிறகும் தனது காதலை ரகசியமாக தொடர்ந்து வந்த அந்த பெண், யுவராஜுடன் இணைந்து தனது கணவன் ராகுலை கொலை செய்ய திட்டமிட்டார். இதன்படி, கடந்த ஞாயிற்றுக்கிழமை ராகுலுடன் பைக்கில் சென்றுகொண்டிருந்தபோது தனது செருப்பு கழன்றுவிட்டதாக கூறி பைக்கை நிறுத்தக் கூறியுள்ளார்.

இதையடுத்து ராகுல் பைக்கை நிறுத்தியபோது, அங்கு மறைந்திருந்த யுவராஜின் நண்பர்கள் 2 பேர் ராகுலை பீர் பாட்டிலால் தாக்கினர். பின்னர் உடைந்த பாட்டிலால் ராகுலின் உடலில் சுமார் 36 முறை குத்தி கொலை செய்தனர்.

ராகுலை கொலை செய்த பிறகு, அவரது மனைவி தனது கள்ளக்காதலன் யுவராஜுக்கு வீடியோ காலில் பேசி ராகுலின் சடலத்தை காட்டியுள்ளார். பின்னர் ராகுலின் உடலை வயல் பகுதியில் வீசிவிட்டு 3 பேரும் தப்பிச் சென்று தலைமறைவாகினர்.

இதற்கிடையில் ராகுல் மற்றும் அவரது மனைவியை காணவில்லை என அவர்களது உறவினர்கள் போலீசாரிடம் புகார் அளித்தனர். பின்னர் ராகுலின் உடல் வயல் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

இதையடுத்து கொலை வழக்கு பதிவு செய்த போலீசார், தலைமறைவாக இருந்த ராகுலின் மனைவி, அவரது கள்ளக்காதலன் யுவராஜ் மற்றும் யுவராஜின் நண்பர்கள் 2 பேர் என மொத்தம் 4 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## இமாசல பிரதேசம்: சர்வதேச போதை பொருள் கும்பலுடன் தொடர்பு; 6 பேர் கைது

சிம்லா, ஏப்.19

இமாசல பிரதேச போலீசார் போதை பொருளுக்கு எதிராக தீவிர நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இதில், காங்ரா மாவட்டத்தில் உள்ள நுபுர் போலீசார், சர்வதேச போதை பொருள் கும்பலுடனான தொடர்பு பற்றி விசாரணை நடத்தினர்.

இதில், 6 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து ஹெராயின் என்ற போதை பொருளையும் பறிமுதல் செய்தனர். இவர்களுக்கு துபாயில் உள்ளவர்களுடன் தொடர்பு இருப்பதும், குற்றவாளிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதும் விசாரணையில் தெரிய வந்தது.

இதுதவிர, ரூ.4.9 லட்சம் பணம், 67.93 கிராம் தங்கம், 95.45 கிராம் வெள்ளி, 2 மொபைல் போன்கள் மற்றும் 2 ஆயுள் காப்பீட்டு பத்திரங்கள் (ரூ.4.5 லட்சம் பிரீமியம் கொண்டது) ஆகியவையும் கடந்த ஆண்டில் கைப்பற்றப்பட்டன.

நடப்பு ஆண்டில் ககன் சர்னா என்பவரின் வீட்டில் நடந்த சோதனையில், ரூ.1.15 கோடி பணம், 125 கிராம் தங்கம் மற்றும் 4 கிராம் வெள்ளி பறிமுதல் செய்யப்பட்டது என போலீசார் தெரிவித்தனர். அவற்றுடன் 2 கார்கள், சொத்து பத்திரங்கள் மற்றும் பிற ஆவணங்களும் கைப்பற்றப்பட்டு உள்ளன.

இந்த வழக்கில் இதுவரை ரூ.3 கோடி மதிப்பிலான சட்டவிரோத சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன என போலீசார் கூறுகின்றனர். தொடர்ந்து, நிதி முறைகேடுகள் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

## நோயாளிக்கு பதிலாக நோயாளியின் தந்தைக்கு அறுவை சிகிச்சை... மருத்துவர்கள் அலட்சியம்



ஜெய்ப்பூர். ஏப்.19

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா பகுதியில் சேர்ந்தவர் மணிஷ். இவருக்கு சமிபத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் காலில் காயம் ஏற்பட்டது. இதனால் கோட்டா பகுதியில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்த மருத்துவர்களின் அவரின் இடது காலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து கடந்த சனிக்கிழமை அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய நாள் குறிக்கப்பட்டிருந்தது. மணிஷுக்கு துணையாக அவரது தந்தை ஜெகதீஸ் மருத்துவமனையில் உடன் இருந்தார். ஜெகதீஸுக்கு ஏற்கனவே முடக்கு வாதம் உள்ளதால் அவரால் பேச முடியாது.

சம்பவத்தன்று மணிஷ் ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்து செல்லப்பட்டார். அப்போது ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே ஜெகதீஸ் இருந்தார். அங்கு வந்த மருத்துவர்கள் சிலர் ஜெகதீஸ் என்பவரை சிகிச்சைக்காக அழைத்துள்ளனர்.

அப்போது இவர் தனது கையை உயர்த்தினார். பின்னர் அந்த மருத்துவர்கள் ஜெகதீஸை ஆபரேசன் தியேட்டருக்கு அழைத்து சென்று அவரது கையில் அறுவை சிகிச்சை செய்ய தொடங்கினர். இதனை அறிந்த அவரது மகன் மணிஷ் அதிர்ச்சியடைந்தார். இதனால் உடனடியாக அங்கு சென்ற மணிஷ் மருத்துவர்களிடம் வாக்கு வாதம் செய்தார்.

இதனையடுத்து அவரது தந்தைக்கு கையில் 6 தையல் போடப்பட்டு திருப்பி அனுப்பி உள்ளனர். நோயாளி என நினைத்து மற்றொரு நபருக்கு மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து தகவலறிந்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அமித்ஷா அல்ல, எந்த ஷா வந்தாலும் தமிழ்நாட்டை ஆள முடியாது: மு.க.ஸ்டாலின்



திருவள்ளூர், ஏப்.19

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியை அடுத்த ஆண்டார்குப்பத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இதில், பங்கேற்ற முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், ரூ.418.15 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். ரூ.390.74 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினர். மேலும், ரூ.357.43 கோடி மதிப்பில் 2 லட்சத்து 2 ஆயிரத்து 531 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

விழாவில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

பல்வேறு திட்டங்களை திராவிட மாடல் ஆட்சியில் வழங்கி வருகிறோம். 10 ஆண்டுகால அ.தி.மு.க. இருண்ட ஆட்சியில் முடங்கிக்கிடந்த உட்கட்டமைப்பு பணிகள் கடந்த 4 ஆண்டுகளாக சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த விழாவில் 63 ஆயிரத்து 124 பேருக்கு பட்டா வழங்கப்படுகிறது. இதுதான் எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம். அரசின் அக்கறையான நிர்வாகத்தால் அனைத்து துறையிலும் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு திட்டங்களை திராவிட மாடல் அரசு செய்து வருகிறது. தி.மு.க. ஆட்சியில் தன்னம்பிக்கையும் வளர்ந்துள்ளது, தமிழ்நாடும் வளர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் பொறுப்பான எதிர்க்கட்சியாக செயல்படாலம் தமிழ்நாட்டிற்கே எதிரிக்கட்சிகளாக செயல்படுகின்றன. தமிழகத்திற்கும் , தமிழக மக்களுக்கும் எதிரானவர்களோடு உறவாடி தமிழ்நாட்டை அடகுவைக்கும் எண்ணத்தை கொண்டுள்ளனர். நீட் தேர்வு எதிர்ப்பு, மும்மொழி திட்டம் நிராகரிப்பு, வக்பு திருத்தச்சட்ட எதிர்ப்பு, தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படும் மாநிலங்களை ஒன்று திரட்டுதல் போன்றவற்றில் நாம்தான் இந்திய அளவில் வலுவாக குரல் கொடுத்து வருகிறோம். மாநில உரிமைகளின் அகில இந்திய முகமாக தி.மு.க. உள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்துதான் தமிழகம் போராடுகிறது. மாநிலங்களின் உரிமைகளை கேட்பது தவறா? கவர்னருக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டு சென்று வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றோம். இதுதான் தி.மு.க.வின் சக்தி. நீட் தேர்வில் விலக்கு தருவோம் என்று அமித்ஷா கூற முடியுமா? இந்தியை திணிக்கமாட்டோம் என்று கூற முடியுமா? தமிழ்நாட்டிற்கு இவ்வளவு சிறப்பு நிதியை கொடுத்துள்ளோம் என்று பட்டியல் போட முடியுமா? தொகுதி சீரமைப்பால் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் குறையாது என்று வாக்குறுதி கொடுக்க முடியுமா?

எவ்வளவு கொடுத்தாலும் இங்கு அழுகின்றனர் என்று பிரதமர் மோடி கூறினார். மத்திய அரசிடம் கையேந்தி நிற்க மாநிலங்கள் பிச்சைக்காரர்களா? என்று நீங்கள் கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். நாங்கள் கேட்பது அழுகையல்ல, தமிழ்நாட்டின் உரிமை.

நான் அழுது புலம்புவனும் அல்ல, ஊர்ந்து சென்று யார் காலில் விழுபவனும் அல்ல. உறவுக்கு கைகொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம். டெல்லி ஆளுகைக்கு தமிழ்நாடு என்றுமே அடிபணியாது. தமிழ்நாடு தனித்தன்மை கொண்டது. 2026லும் திராவிட மாடல் ஆட்சிதான். தமிழ்நாடு எப்போதும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான். அமித்ஷா அல்ல, எந்த ஷா வந்தாலும் தமிழ்நாட்டை ஆள முடியாது ' இவ்வாறு அவர் கூறினார்.

## மதுரை மாவட்டத்தில் உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை மாவட்ட கலெக்டர் கேட்டறிந்தார்

மதுரை மாவட்டம் செய்தியாளர் சுற்றுப் பயணம் இனி வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் மூலம் காய்கறிகளை ஆர்டர் செய்து கொள்ளும் வகையில் உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா.செள.சங்கீதா, இஆப, அவர்கள் கேட்டறிந்தார்.

மதுரை மாவட்டத்தில் அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய 4 இடங்களில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளை டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா செள. சங்கீதா. இஆப. அவர்கள், செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதிமா.செள.சங்கீதா. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

தமிழகத்தில் முதல் முறையாக கடந்த 2000வது ஆண்டு அப்போதைய முதல்அமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரை அண்ணாநகரில் உழவர்சந்தைதிட்டத்தை தொடங்கி வைத்தார். இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகவிவசாயிகளிடம்இருந்து காய்கறிகளை பொதுமக்கள் வாங்கும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்திற்குபிறகும்இந்ததிட்டத்தின் முக்கியத்துவம் கருதி இந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது.

மதுரையில் தற்போது அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய 4 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், அதிகரித்து வரும் விற்பனையை கருத்தில் கொண்டு உழவர் சந்தையில் இருந்து வீடுகளுக்கே நேரடியாக டோர் டெலிவரி செய்யும் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்காக சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையில் உள்ள உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுகின்றன.



விரைவில் மதுரையிலுள்ள உழவர் சந்தைகளில் இருந்து பொது மக்களின் வீடுகளுக்கு நேரடியாக காய்கறிகள் விற்பனை செய்யும் திட்டம் தொடங்கப்படும். தற்போது அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. மேலும், உழவர் சந்தைகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு பதிவுசெய்த விவசாயிகளுக்கு எலக்ட்ரானிக் தராசுகள் வழங்கப்படும்.

உழவர் சந்தையிலிருந்து மாட்டுத்தாவணி மார்க்கெட் வெறும் 2 கி.மீ. தொலைவே உள்ள போதிலும், பொது மக்கள் உழவர் சந்தைகளிலேயே காய்கறிகளை வாங்க விரும்புகின்றனர்.

இங்கு குளிர்பதன கிடங்கு உள்ளிட்ட போதிய சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகளின் கோரிக்கையினை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சேமிப்பு கிடங்கு வசதிகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா. செள.சங்கீதா. தெரிவித்தார்.

## கொளத்துப்பாளையம்:கருங்காலி வலசு பகுதி ஸ்ரீ சேவற் கொடியான் தீர்த்த காவடி ஏழாம் ஆண்டு முன்னிட்டு பாதயாத்திரை

தாராபுரம், ஏப் 19

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஒன்றியம் கொளத்துப்பாளையம் பேரூராட்சி 16 வது வார்டு கருங்காலி வலசு பகுதியில் ஸ்ரீ சேவற் கொடியான் தீர்த்த காவடி ஏழாம் ஆண்டு தொடக்கம் நான்காம் ஆண்டு பாதயாத்திரை குழு செல்லும் பக்தர்களுக்கு வரும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெற வேண்டி சின்னவர் படை சார்பாக சிறப்பு அபிஷேக ஆராதனை முதல் நாள் ஊர்



பொது அன்னதானம் கொளத்துப்பாளையம் பேரூராட்சி தலைமை உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம்சார்பாகமன்றத்தின்பொருளாளர் சுப்பையன் வழங்கி சிறப்பித்தார் உடன் காவடித் தலைவர் செல்வராஜ், கணக்காளர் பிரபாகரன், கோயில் பூசாரி மருதமுத்து, இளங்கோவன், கண்ணன் மற்றும் மாவட்ட துணை பொருளாளர் ஈஸ்வரன் தாராபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மணிவாசகம் பேரூராட்சித் தலைவர் முருகேசன் ஒன்றிய துணைத் தலைவர் சென்னியப்பன், ஒன்றிய பரிந்துரையாளர் உதயகுமார், தேவகுமார், நல்லாம்பாளையம் ஊராட்சி பொறுப்பாளர் உதயகுமார், கரையூர் கிளை காளிராஜ், பொன்னிவாடி கிராமம் கிருஷ்ணாபுரம், கிளை சரவணன், மற்றும் கருங்காலி வலசு கிளை செல்வன், சூர்யா, ரகுபதி, பரணி, தமிழரசன், தர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

## அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை ஏப்.19

சென்னையில் கிண்டியில் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளது. இந்த பல்கலைக்கழகத்திற்கு இன்று வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. மின்னஞ்சல் மூலம் பல்கலைக்கழகத்திற்கு மர்ம நபர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார். இதையடுத்து, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வெடிகுண்டு நிபுணர்கள், போலீசார் விரைந்து வந்து சோதனை நடத்தினர். அதில், வெடிகுண்டு மிரட்டல் புரளி என்று தெரியவந்தது. இதனை தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் யார்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். வெடிகுண்டு மிரட்டலால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தினகனி

19.4.2025

## வீட்டில் புகுந்து மூதாட்டியிடம் நகை, பணம் பறிப்பு

திருநெல்வேலி,ஏப்.19

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகே உள்ள தெற்கு ஆறுபுளி கிராமத்தைச் சேர்ந்தவர் அன்னம்மாள் (வயது 70). இவரது கணவர் ஞானபிரகாசம் சில ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டதால் அன்னம்மாள் மட்டும் தனியாக வீட்டில் வசித்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் வீட்டில் தூங்க சென்றார்.

அப்போது, வீட்டின் கதவை மர்மநபர்கள் தட்டினர். ஆனால் அவர் திறக்காததால், வீட்டின் ஜன்னலை உடைத்து 3 மர்மநபர்கள் உள்ளே புகுந்தனர். அன்னம்மாளை மிரட்டி, அவர் காதில் அணிந்திருந்த 3 கிராம் தங்க கம்மல், ரூ.1,000 ஆகியவற்றை பறித்து கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து நேற்று காலையில் அக்கம் பக்கத்தினருக்கு நடந்த சம்பவத்தை அன்னம்மாள் கூறினார்கள். அவர்கள் உடனடியாக வள்ளியூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் விசாரணை நடத்தினர்.

இது குறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார் தப்பி ஓடிய மர்மநபர்களை வலைவீசி தேடி வருகிறனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஓடும் ரெயிலில் இருந்து தவறி விழுந்து பயணி சாவு

திருநெல்வேலி ஏப்.19

நாங்குநேரி நெல்லை ரெயில் பாதையில் மருகால்குறிச்சி அருகே நேற்று மதியம் ஒருவரின் உடல் கிடந்தது. இதுபற்றி தகவல் அறிந்தநாங்குநேரிபோலீசாரும், நாகர்கோவில் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது இறந்து கிடந்தவர் வெளிமாநிலத்தை சேர்ந்தவர் எனவும், ரெயிலில் வரும் போது தவறி கீழே விழுந்து இறந்ததும் தெரியவந்தது.

அவரது பெயர் விவரம் எதுவும் உடனடியாக தெரியவில்லை.

இது தொடர்பாக ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## நிதி நிறுவனத்தில் வேலை என கூறி 9 பேரிடம் ரூ.15 லட்சம் மோசடி; 2 பேர் கைது

சேலம்ம் ஏப்.19

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் பகுதியை சேர்ந்தவர் ஆனந்த் (வயது 34). அம்மாபேட்டையை சேர்ந்தவர் செல்வராஜ் (35). இவர்கள் 2 பேரும் பள்ளப்பட்டி பகுதியில்கடந்த ஆண்டுதனியார்நிதிநிறுவனம் ஒன்று தொடங்கினர்.

இதில் வேலைவாய்ப்பு இருப்பதாக கூறி முகநூலில் விளம்பரம் செய்தனர்.

இதை பார்த்து வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களை சேர்ந்த ஏராளமானவர்கள் விண்ணப்பித்தனர். பின்னர் அவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தி உள்ளனர். இதையடுத்து அதில் தேர்வான 9 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கி உள்ளனர். அப்போது அவர்களிடம் டெபாசிட் தொகை செலுத்துமாறு ஆனந்த், செல்வராஜ் ஆகியோர் கூறி உள்ளனர். இதை நம்பி அவர்கள் மொத்தமாக ரூ.15 லட்சம் வரை செலுத்தினர். அதன்பிறகு அவர்களுக்கு நிறுவனத்தில் வேலை வழங்கவில்லை. இதையடுத்து தாங்கள் மோசடி செய்யப்பட்டதை உணர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் இதுகுறித்து பள்ளப்பட்டி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதையடுத்து வேலை வழங்குவதாக கூறி 9 பேரிடம் ரூ.15 லட்சம் மோசடி செய்த ஆனந்த், செல்வராஜ் ஆகியோரை நேற்று போலீசார் கைது செய்தனர். மேலும் அவர்கள் வேறு நபர்களை ஏமாற்றினார்களா? என போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தெருநாய்கள் தொல்லையை ஒரு வாரத்தில் கட்டுப்படுத்த வேண்டும்: திருமங்கலம் நகராட்சி கூட்டத்தில் தீர்மானம்

மதுரை, ஏப்.19


திருமங்கலம் நகராட்சியில் நகர்மன்ற குழு கூட்டம் நடைபெற்றது. நகர்மன்ற குழு தலைவர் ரம்யா முத்துக்குமார் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஆதவன் முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் அசோக்குமார், பொறியாளர் ரத்தினவேலு உள்ளிட்ட நகராட்சி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில், 2வது வார்டு பகுதியில் தெரு விளக்கு எரியவில்லை. போக்குவரத்து பணிமனைக்கு எதிரே உள்ள சாலை சேதமடைந்துள்ளது. இதனை சரிசெய்ய வேண்டும் என கூறப்பட்டது. இந்த நிலையில் கவுன்சிலர் சின்னச்சாமி கூறுகையில், திருமங்கலம் நகராட்சியில் குறை கூறி மனு கொடுத்தால், இதுவரை நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என கேள்வி எழுப்பினார்.

இதனை தொடர்ந்து துணை தலைவர் ஆதவன், தெருநாய்களை ஒரு வாரத்துக்குள் பிடிக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார்.மக்கள்தொகையை விட நாய்கள் அதிகம் உள்ளதாக திருமங்கலம் நகராட்சி கூட்டத்தில் விவாதம் செய்யப்பட்டது. தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்எனபொறியாளர் ரத்தினவேலு தெரிவித்தார்.

## நில அபகரிப்பு வழக்கு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆஜராக கோர்ட்டு உத்தரவு



சென்னைம், ஏப்.19

சென்னை கிண்டியில் உள்ள தொழிலாளர் காலனியில் உள்ள கண்ணன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு (சிட்கோ) சொந்தமான நிலத்தை சென்னை மேயராக இருந்தபோது அமைச்சர் மா.சுப்பிரமணியன், தனது அதிகாரத்தை பயன்படுத்தி முறைகேடான ஆவணங்கள் மூலம் தனது மனைவியின் பெயருக்கு மாற்றம் செய்ததாக சைதாப்பேட்டையை சேர்ந்த பார்த்திபன் என்பவர் புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் போலி ஆவணங்கள் தயாரித்தல், ஏமாற்றுதல், கூட்டு சதி, ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் மா.சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி மீது அ.தி.மு.க. ஆட்சியில் சி.பி.சி.ஐ.டி. (மாநில குற்றப்பிரிவு போலீஸ்) வழக்குப்பதிவு செய்திருந்தது. இந்த வழக்கில் கடந்த 2019ம் ஆண்டு போலீசார் தரப்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தற்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருக்கும் நிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மீதான இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க் கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. இதனிடையே, தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி மா.சுப்பிரமணியன் தாக்கல் செய்த மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், மா.சுப்பிரமணியன் மீதான நில அபகரிப்புவழக்குஇன்று மீண்டும் சிறப்பு கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் மா.சுப்பிரமணியன், அவரது மனைவி காஞ்சனா இருவரும் ஆஜராகவில்லை. எனினும் மா.சுப்பிரமணியன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அமைச்சரவை கூட்டம்நடப்பதால்விசாணைக்கு நேரில் ஆஜராக விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டது.


இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, குற்றச்சாட்டு பதிவுக்காக மா.சுப்பிரமணியன், அவரது மனைவி காஞ்சனா இருவரும் அடுத்த மாதம் (மே) 6ந் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## நெல்லை: ஜாகீர் உசேன் கொலை வழக்கு முக்கிய குற்றவாளி கைது

திருநெல்வேலி ஏப்.19

நெல்லை மாநகர் டவுன் பகுதியில் கடந்த மார்ச் 18ம் தேதி அதிகாலை தொழுகை முடித்து வீடு திரும்பி கொண்டிருந்த ஓய்வு பெற்ற உதவி காவல் ஆய்வாளர் ஜாகீர் உசேன் பிஜிலி, நான்கு பேர் கொண்ட கும்பலால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். நிலம் தொடர்பான சர்ச்சையில், அதே பகுதியில் வசிக்கும் தவ்பீக் தரப்பினரால் கொல்லப்பட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நிலத்தகராறு காரணமாக தனக்கு கொலை மிரட்டல்கள் வருவதாக, கொல்லப்படுவதற்கு முன்பு ஜாகீர் உசேன் பேசிய வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



இவ்வழக்கில், கார்த்திக், 32, அக்பர் ஷா, 32, ஆகியோர்நீதிமன்றத்தில் சரணடைந்தனர். தலைமறைவாக இருந்த தவ்பீக்கை போலீசார் துப்பாக்கியால் சுட்டு கைது செய்தனர். இவ்வழக்கு தொடர்பாக, இதுவரை மொத்தம் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஜாகிர்உசேன்கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான நூருனிஷா என்பவரை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நூருனிஷாவை ரகசிய இடத்தில் வைத்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மாமல்லபுரம்: புராதன சின்னங்களை சுற்றிப்பார்க்க இன்று அனுமதி இலவசம்

மாமல்லபுரம், ஏப்.19

உலகில் உள்ள பண்டைய காலத்து பாரம்பரிய, கலாச்சார நினைவுச் சின்னங்களை பாதுகாக்கவும்,

அடுத்ததலைமுறைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 18 ஆம் தேதி உலக பாரம்பரிய தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

அந்தவகையில்,நாளை உலக பாரம்பரிய தினத்தை முன்னிட்டு



செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோவில், ஐந்து ரதம் உள்ளிட்ட புராதன சின்னங்களை இலவசமாக சுற்றிப்பார்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாநகர் திருப்பரங்குன்றம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பாதுகாப்பு நலன் கருதி மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் , உத்தரவின்படி திருப்பரங்குன்றம் கோவிலில் புதிய காவல் நிலையம் திறப்பு விழாநடைபெற்றது. இந்த விழாவில் காவல்துறை ஆணையர் தெற்கு இனிக்கோ திவ்யன் தலைமையேற்று திறந்து வைத்தார். உடன் திருப்பரங்குன்றம் கோவில் அறங்காவலர்கள் மற்றும் திருப்பரங்குன்றம் சரகம் காவல் உதவி ஆணையாளர் சசி பிரியா, திருப்பரங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர்கள் மீனாட்சி சுந்தரம் மற்றும் ஆய்வாளர் ராஜதுரை மற்றும்அறங்காவலர்குழுதலைவர்சத்ய பிரியா, அறங்காவலர்கள்குழு உறுப்பினர்சண்முகசுந்தரம்காவலர்கள், மகளிர் காவலர்கள் என பலரும் கலந்து கொண்டுஇந்த விழாவை சிறப்பித்தனர்.

## "சோதனையின்போது அதிகாரிகள் துன்புறுத்தப்படவில்லை" அமலாக்கத் துறை

சென்னை, ஏப்.19

சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறை நடத்திய திடீர் சோதனை நடத்திய சட்டவிரோதம் என்று அறிவிக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு, நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.ராஜேசேகர் ஆகியோர் முன்பு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இன்று நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது அமலாக்கத் துறை தரப்பில், "டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் சோதனையின் போது பெண் அதிகாரிகள் யாரும் இரவில் தங்கவைக்கப்படவில்லை. ஒருசில ஆண் அதிகாரிகள் மட்டுமே மூன்று நாட்களும் தங்க வைக்கப்பட்டனர். நள்ளிரவில் பெண் அதிகாரிகள் யாரும் வீட்டுக்கு அனுப்பப்படவில்லை. பாதுகாப்பு கருதி அவர்கள் முன்கூட்டியே வீட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.



அதிகாரிகளுக்கோ, அலுவலக உடைமைகளுக்கோ எந்த சேதமும் ஏற்படுத்தவில்லை . சோதனை மேற்கொண்ட போது அமலாக்கத் துறை பெண் அதிகாரிகள் இருந்தனர். சோதனையின் போது அதிகாரிகள் யாரும் துன்புறுத்தப்படவில்லை. அவ்வாறு துன்புறுத்தப்பட்டதாகபொய்யான தகவல்களை கூறி வழக்கை திசை திருப்ப முயற்சி செய்கிறார்கள்.

எதற்காக சோதனை என டாஸ்மாக் தலைவர், மேலாளருக்கு தெரியப்படுத்திய பிறகே சோதனை நடைபெற்றது. அனைவருக்கும் உணவு மற்றும் போதிய ஓய்வு அளிக்கப்பட்டது. சோதனையின் போது யாருடைய அந்தரங்க உரிமையும் பாதிக்கப்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டது.

அமலாக்கத் துறை வாதங்கள் முடிந்த நிலையில் டாஸ்மாக் தரப்பு பதில் வாதம் வைக்க உள்ளது. இதனையடுத்து, வழக்கு விசாரணையை வரும் 21ஆம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## இறந்த தந்தையின் உடலுக்கு முன்பு காதலியை திருமணம் செய்து கொண்ட வாலிபர்

விருத்தாசலம், ஏப்.19

விருத்தாசலம் அடுத்த கவணை கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வராஜ் (63 வயது). ரெயில்வே துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மகன் அப்பு (32 வயது). இவரும் விருத்தாசலம் அடுத்த அரசக்குழி கிராமத்தைச் சேர்ந்த விஜயசாந்தியும் (23 வயது) கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்ததாக தெரிகிறது.

இந்த நிலையில் செல்வராஜ் நேற்று முன்தினம் வீட்டில் இருந்தபோது திடீரென அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக உறவினர்கள் அவரை மீட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் வீட்டிற்கு கொண்டுவரப்பட்டு இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் நடந்து வந்தது.

அப்போது அப்பு எனது தந்தையின் ஆசியுடன் தான் திருமணம் நடக்க வேண்டும் எனக் கூறி அவரது காதலியான விஜயசாந்தியை வரவைத்து தனது தந்தை உடலின் முன்பு நின்று தனது தாய் கண்ணம்மாள், தந்தை செல்வராஜிக்கு பாத பூசைஉள்ளிட்டதிருமண சடங்குகளை செய்து அவரது தந்தையின் கையால் தாலி எடுத்து கொடுக்க சொல்லி அந்த தாலியை வாங்கி தனது காதலி விஜயசாந்திக்கு கட்டி திருமணம் செய்து கொண்டார். மேலும் இருவரும் தாய், தந்தையின் காலில் விழுந்து ஆசி பெற்றனர். அப்போது அவரது தாயார் துக்கம் தாங்க முடியாமல் அழுதபடியே அவர்களை வாழ்த்தினார். செல்வராஜின் இறுதி சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் பலரும் துக்கத்திலும் கண்ணீர் மல்க அப்பு, விஜயசாந்தியை வாழ்த்தினார்கள்.



## உட்கட்சி விவகாரம்: சென்னை ஐகோர்ட்டில் அதிமுக முக்கிய தகவல்

சென்னை, ஏப்.19

அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது என தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி திண்டுக்கல்லை சேர்ந்த சூர்ய மூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

சூர்ய மூர்த்தி அளித்த விண்ணப்பத்தை 4 வாரங்களில் பரிசீலிப்பதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, வழக்கை முடித்து ஐகோர்டு முடித்து வைத்தது. இதற்கிடையில் இரட்டை இலை சின்னம், உட்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் அனுப்பிய நோட்டீசை எதிர்த்து அதிமுக, பொது செயலாளர் எடிப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த வழக்கை விசாரித்தஐகோர்ட்டு, தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு உத்தரவின் அடிப்படையில் கட்சியில் பிளவுகள் உள்ளதா என திருப்தி அடைந்த பிறகே விசாரணையை தொடர வேண்டும் என தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டிருந்தது.



இந்நிலையில், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு உத்தரவின் படி மட்டுமே விசாரணை நடத்தப்பட வேண்டும் என அதிமுக தொடர்ந்த வழக்கில் பிறப்பித்த உத்தரவை, சூர்ய மூர்த்தி தாக்கல் செய்த வழக்கில் பிறப்பித்த உத்தரவில் சேர்க்க கோரி அதிமுக தரப்பில் மறு ஆய்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு உத்தரவின் படி விசாரணை நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவிப்பு அனுப்பி உள்ளதாக, அதிமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மறு ஆய்வு மனு செல்லத்தக்கதல்ல என்று கூறி, மனுவைமுடித்துவைத்து உத்தரவிட்டார்.

## த.வெ.க. கட்சிக் கொடியில் யானை சின்னம்: விஜய் பதிலளிக்க கோர்ட்டு உத்தரவு

சென்னை, ஏப்.19

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் பெரியார் அன்பன் என்கிற இளங்கோவன் சென்னை உரிமைகள் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில் தமிழக வெற்றிக் கழக கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் இந்த மனு சென்னை உரிமையியல் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது அப்போது பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பகுஜன் சமாஜ் கட்சி தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்றும் அந்தக் கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அசாம் தவிர மற்ற மாநிலங்களில் பகுஜன் சமாஜ் கட்சிக்கு மட்டுமே இந்த சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வாதிட்டார்.

மேலும் தமிழக வெற்றிக்கழகம் கட்சி கொடியில் யானைகள் இடம் பெற்றிருப்பது தேர்தல் சின்னங்கள் விதிகளுக்கு முரணானது என்றும் வாதிட்டார். ஏற்கனவே இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு புகார் அனுப்பிய போது, தமிழகவெற்றிக்கழகம்கட்சி இன்னும்தேர்தல்ஆணையத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும் பதிவு செய்யும் போது இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.



இந்நிலையில்யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கில், த.வெ.க. கட்சி தலைவர் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் ஏப்ரல் 29 ம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# காவல் நிலையம் முன் இளம்பெண் தற்கொலை விவகாரம்: போலீசார் விசாரணைக்கு தடை





மதுரை, ஏப்.19

தஞ்சையை அடுத்த நடுக்காவேரி அரசமர தெருவை சேர்ந்தவர் அய்யாவு. இவருக்கு தினேஷ் (வயது 32) என்ற மகனும், துர்க்கா, மேனகா(31), கீர்த்திகா(29) ஆகிய 3 மகள்களும் உள்ளனர். இவர்களில் துர்க்காவுக்கு திருமணமாகி விட்டது. என்ஜினீயரிங் பட்டதாரியான கீர்த்திகா அரசு பணி தேர்வுக்காக படித்து வந்தார்.

இந்தசூழலில்போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர், ஒரு வழக்கு விசாரணைக்காக தினேசை மோட்டார் சைக்கிளில் நடுக்காவேரி போலீஸ் நிலையத்துக்குஅழைத்து சென்றார். உடனே தினேசின் உறவினர்களும் போலீஸ் நிலையத்திற்கு சென்றனர். அப்போது மேனகா, கீர்த்திகா ஆகியோர் தங்கள் அண்ணன் மீது பொய் வழக்கு போடாமல் அவரை உடனடியாக விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

.ஆனால் தினேஷ் மீது பொது இடத்தில் கத்தியை காட்டி மிரட்டியதாக வழக்குப்பதிவு செய்த போலீசார், அவரை கைது செய்ததாக கூறியதுடன் மேனகா, கீர்த்திகா ஆகியோரை தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த இருவரும் போலீஸ் நிலையம் முன்பு விஷத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றனர். இதனையடுத்து சகோதரிகள் இருவரும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி கீர்த்திகா பரிதாபமாக உயிரிழந்தார். மேனகாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக காவல் ஆய்வாளர் சர்மிளா ஏப்ரல் 11ஆம் தேதி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார். மேலும் இரண்டு காவல் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர் ஆகியோர் 16 ஆம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். தவிர தற்கொலைக்கு தூண்டுதல், எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் மாற்றி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே, ஆய்வாளர் சர்மிளா உள்பட 4 காவலர்களைப் பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கீர்த்திகாவின் உடலை வாங்க மறுத்து நடுக்காவேரி அரசமரத் தெருவில் தொடர்ந்து 8வது நாளாக வியாழக்கிழமையும் உறவினர்கள் உள்ளிட்டோர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சூழலில், தேசிய எஸ்.சி., எஸ்.டி. ஆணைய இயக்குநர் ரவிவர்மா தலைமையிலான குழுவினர் நடுக்காவேரிக்கு சென்று கீர்த்திகாவின் குடும்பத்தினரிடம் விசாரணை மேற்கொண்டனர். பின்னர், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மேனகாவிடமும் விசாரித்தனர். இது தொடர்பான அறிக்கையைத்தலைமையிடத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தனர்.

இந்நிலையில் இளம் பெண் கீர்த்திகா தற்கொலை விவகாரத்தை நடுக்காவேரி போலீசார் விசாரிக்க மதுரை ஐகோர்ட்டு கிளை தடை விதித்துள்ளது.

மேலும் உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்வது குறித்து மனுதாரர் துர்கா முடிவு செய்ய வேண்டும் என்றும், விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்ற கோருவது பற்றி திருச்சி சரக டிஐஜி வருண்குமார் பதிலளிக்க வேண்டும் என்றும் மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

# இரட்டை இலை விவகாரம்: 28ம் தேதி விசாரணையைத் தொடங்குகிறது தேர்தல் ஆணையம்



சென்னை, ஏப்.19

அ.தி.மு.க.வில் சட்ட விதிகளை திருத்தி எடப்பாடி பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று ஏற்கனவே தொடரப்பட்ட பல வழக்குகள் தள்ளுபடியாகி உள்ள நிலையில்சிவில்நீதிமன்றத்தில் மட்டும்அதுநிலுவையில் இருந்து வருகிறது. இதனை குறிப்பிட்டு சிவில் வழக்கு விசாரணை முடியும் வரையில் எடப்பாடி பழனிசாமி இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வந்தது.

இதற்கு ஐகோர்ட்டு தடை விதித்திருந்தநிலையில் அதனை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடரப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை முடித்து நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவி, இரட்டை இலை சின்னம் விவகாரம் தொடர்பாக தேர்தல் கமிஷனர் விசாரணை நடத்தலாம் என்று கூறியுள்ள ஐகோர்ட்டு இதனை எதிர்த்து எடப்பாடி பழனிசாமியின் மனுவை அதிரடியாக தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதன் மூலம் தேர்தல் ஆணையம் இது தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது. எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இந்த விவகாரத்தில் தொடர்புடைய 6 பேரிடம் கருத்துக்களை கேட்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் விரைவில் அழைப்பாணை அனுப்புவதற்கு திட்டமிட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், இரட்டைஇலைசின்னம் விவகாரத்தில் ஏப்ரல் 28ம் தேதி தேர்தல் ஆணையம் விசாரணையை தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து புகார்தாரர்களும் ஏப்ரல் 28ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு ஆஜராக தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

# மெட்ரோ பாலத்தின் தூண் மீது அரசு பேருந்து மோதி விபத்து: 10க்கும் மேற்பட்ட பயணிகள் காயம்



சென்னை, ஏப்.19

அண்ணா சதுக்கத்திலிருந்து பூந்தமல்லி நோக்கி அரசு பேருந்து ஒன்று இன்று மாலை முப்பதுக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தது. பேருந்தை டிரைவர் ஏழுமலை என்பவர் ஓட்டிச் சென்றார். இந்த நிலையில் பேருந்து பூந்தமல்லி அடுத்த குமணன்சாவடி அருகே சென்றபோது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் நடுவே மெட்ரோ ரெயில் பணிக்காக அமைக்கப்பட்டிருந்த மெட்ரோ ரெயில் பாலத்தின் தூணில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தின் முன் பக்கம் முழுவதுமாக சேதம் அடைந்தது. இந்த விபத்தில் பேருந்தில் இருந்த பத்துக்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். உடனடியாக அங்கிருந்த பொதுமக்கள் காயமடைந்தவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் பூந்தமல்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் டிரைவர் ஏழுமலை பலத்த காயமடைந்தார். அவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து குறித்து ஆவடி போக்குவரத்து புலனாய்வு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். வெயிலின் தாக்கம் காரணமாக போரூர் அருகே வந்து கொண்டிருந்தபோதே டிரைவருக்கு லேசான மயக்கம் வருவது போல இருப்பதாக கண்டக்டரிடம் கூறியுள்ளார். இந்த நிலையில் பூந்தமல்லி அருகே வந்தபோது டிரைவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து போலீசார் இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரையில் கஞ்சா கடத்திய குற்றவாளிக்கு 12 ஆண்டுகள் சிறை நீதிபதி தீர்ப்பு




மதுரை ஏப்.19

2017 அக்டோபர் 14ம் தேதியன்று கஞ்சாகடத்துவதாக மதுரை மாநகர காவல் துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி தீவிர வாகன தணிக்கை செய்தபோது பைபாஸ் ரோடு அருகே சந்தேகப்படும்படி அவ்வழியாக வந்த காரை போலீசார் சோதனை செய்தனர். அப்போது அந்த காரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருளான 21 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து 21 கிலோ கஞ்சாவை போலீசார் கைப்பற்றியதோடு, அதை கடத்தி வந்த மதுரை திருவாதவூரைச் சேர்ந்த பெரியகருப்பன் மகன் ஐயம்பிள்ளை (வயது 58) என்பவரை கைது செய்தனர். பின்னர் செல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வழக்கின் சாட்சிகள் விசாரணை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் போதை பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இவ்வழக்கின் சாட்சிகள் விசாரணை முடிவுற்று நேற்று (16.04.2025) தீர்ப்பு வழங்கிய மதுரை மாவட்ட முதலாவது கூடுதல்போதைபொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஹரிஹரகுமார், இவ்வழக்கில் 23 கிலோ தடை செய்யப்பட்ட கஞ்சா கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட ஐயம்பிள்ளை மீதான குற்றச்சாட்டுக்கள், சாட்சிகள் விசாரணையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் ஆகியதால், அவரை குற்றவாளி என தீர்ப்பளித்து, அவருக்கு 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்து உத்தரவிட்டார். இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட செல்லூர்காவல்துறையினரை காவல்ஆணையர்பாராட்டினார்.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



தூத்துக்குடி, ஏப்.19

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், முந்திய நாட்கள், பிந்திய நாட்களில் காலையில் கடல்நீர் உள்வாங்குவதும், பின்னர் மாலையில் இயல்புநிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், திருச்செந்தூரில் இன்று கடல் நீர் திடீரென உள்வாங்க தொடங்கியது. பின்னர் சுமார் 100 அடி தூரம் கடல் நீர் உள்வாங்கியது. இதனால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன.

ஆனாலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்தவித அச்சமும் இன்றி பாறையில் நடந்து சென்று ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர். மேலும் பக்தர்கள் வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.

# கருணாநிதி நினைவிடத்தில் கோவில் கோபுர அலங்காரம்: அதிமுக கண்டனம்



சென்னை, ஏப்.19

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவிடத்தில் கோவில் கோபுரம் போல அலங்கரிக்கப்பட்டு உள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், அதிமுகவும், இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

"திமுக அரசு, இந்து மத மக்களின் உணர்வுகளை தொடர்ந்து கொச்சைப்படுத்தி வருவதாகவும், இந்துக்களை கொச்சைப்படுத்துவதில் அப்படி என்ன சந்தோசம் உங்களுக்கு?" என்றும் எக்ஸ் சமூக வலைதளம் மூலம் அதிமுக கேள்வியெழுப்பியுள்ளது.

# வேலூர் மத்திய சிறையில் இருந்து தப்பிய கைதி மீண்டும் கைது



வேலூர், ஏப்.19

வேலூர் மத்திய சிறையில் தண்டனை பெற்று வந்த ஆயிள் தண்டனை கைது முத்துக்குமார், கடந்த 2022 பிப்ரவரி 21 ஆம் தேதி சிறையில் இருந்து தப்பிச்சென்றான். அவனை வேலூர் மத்திய சிறை காவலர்கள் மற்றும் பாகாயம் போலீசார் வருட கணக்கில் தேடி வந்தனர்.

இந்த நிலையில், 3 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் முத்துக்குமார் சிக்கியுள்ளான். பெங்களூருவில் வைத்து முத்துக்குமாரை தனிப்டை காவல்துறையினர் கைது செய்தனர். அவனிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரை சித்திரை திருவிழா: அன்னதானம் வழங்க விதிமுறைகள் அறிவிப்பு



மதுரை, ஏப்.19

மதுரை மீனாட்சியம்மன் கோவில் சித்திரைத் திருவிழா ஏப்.29ல் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. 12 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் பட்டாபிஷேகம், திருக்கல்யாணம், தேரோட்ட விழாக்களில் பக்தர்கள் அதிகளவில் கூடுவர். திருவிழாவின் மகுடமாக மே 12ம் தேதி கள்ளழகர் ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் இறங்குகிறார்.

அன்றைய தினம் ஆற்றில் லட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள். கடந்த ஆண்டு திருவிழாவின் 12 நாட்களில் மொத்தம் 25 லட்சம் பக்தர்கள் திரண்டதாகவும், நடப்பாண்டு 30 லட்சம் பக்தர்கள் திரள்வார்கள் என்றும் மாநகராட்சி கணித்துள்ளது. பக்தர்களுக்குத் தேவையான சுகாதாரம், குடிநீர், மருத்துவம், சாலை கட்டமைப்பு மற்றும் பிற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள மாநகராட்சி தயாராகி வருகிறது. இந்நிலையில் மதுரை சித்திரை திருவிழாவில் அன்னதானம் வழங்குவதற்கான விதிமுறைகளை அம்மாவட்ட கலெக்டர் சங்கீதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான அறிவிப்பில், "மதுரை சித்திரை திருவிழாவுக்கு அன்னதானம், நீர் மோர் வழங்குபவர்கள் செயற்கை சாயத்தை சேர்க்கக் கூடாது. தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் கப்புகள் ஆகியவற்றை முழுமையாக தவிர்க்க வேண்டும் அன்னதானம் வழங்குபவர்கள் மற்றும் பெறுபவர்கள் சாப்பிட்ட பின்பு அன்னதானம் வழங்கும் இடங்களில் சேரும் கழிவுகள் முறையாக மாநகராட்சி குப்பை தொட்டியில் போட வேண்டும். அன்னதானம், நீர்மோர் மற்றும் குடிநீர் வழங்கும் நபர்கள் https://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் ரூ.100 கட்டணம் செலுத்தி விண்ணப்பித்து உணவு பாதுகாப்பு துறையின் அனுமதி பெற்று வழங்க வேண்டும்

உணவு மற்றும் உணவுப் பொருள் தொடர்பான புகார்களுக்கு தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு துறை (Whatsapp No.) எண். 9444042322ல் தொடர்பு கொண்டு புகார்கள் தெரிவிக்கலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் அதிகரிக்கும் என்கவுன்ட்டர்கள்.. எச்சரிக்கை விடுத்த மதுரை ஐகோர்ட்டு



மதுரை, ஏப்.19

திருச்சியை சேர்ந்த சத்யஜோதி என்பவர் ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், தனது சகோதரர் வெள்ளைக்காளி தற்போது சென்னை புழல் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். சமீபத்தில் மதுரையில் கிளாமர்காளி என்ற ரவுடி கொலை செய்யப்பட்டார். இந்த கொலைக்கும் வெள்ளைக்காளிக்கும் எந்ததொடர்பும்இல்லை. ஆனால், போலீசார் உள் நோக்கத்துடன் வெள்ளைக்காளியை இந்த வழக்கில் தொடர்புபடுத்தி உள்ளனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுபாஷ் சந்திர போஸ் என்பவர் சமீபத்தில் என்கவுன்ட்டரில் இறந்துவிட்டார். எனவே, வெள்ளைக்காளியையும் போலீசார் என்கவுன்ட்டர்செய்ய வாய்ப்புள்ளது. ஆகவே, அவரது விசாரணையை வீடியோ கான்பரன்ஸ் மூலம் நடத்த உத்தரவிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த மனு நீதிபதி தனபால் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், விசாரணையின் பெயரில் வெள்ளைக்காளியை அழைத்துச் சென்று என்கவுன்ட்டர் செய்ய வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதற்கு நீதிபதி கூறுகையில், "தமிழ்நாட்டில் சமீபத்தில் என்கவுன்ட்டர்கள் அதிகரித்து உள்ளன. போலீஸ் அதிகாரிக்கு துப்பாக்கி கொடுத்திருப்பது என்கவுன்ட்டர் செய்வதற்கு அல்ல.. தற்காப்புக்கு தான். குற்றவாளிகளை காலுக்குக் கீழ் சுட்டுப்பிடியுங்கள்.. புழல் சிறையில் உள்ள வெள்ளை காளியை மதுரை திருமங்கலம் கோர்ட்டுக்கு அழைத்து வரும்போது அவருக்கு ஆபத்து ஏற்பட்டால், அந்த வழக்கு கொலை வழக்காக மாற்றப்படும்" என்று எச்சரிக்கை விடுத்தார். .

இதனிடையே அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இரண்டு போலீசாரை ரவுடிகள் கொலை செய்துவிட்டதாக தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்கின்விசாரணையை ஏப்ரல் 29ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# திருப்பத்தூர் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடை நீக்கம்: பள்ளிக் கல்வித்துறை உத்தரவு

திருப்பத்தூர், ஏப்.19

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ஆவாரங்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் பள்ளி வளாகத்தையும், நீர் தேக்க தொட்டியையும் துடைப்பம் வைத்து சுத்தம் செய்யும் வீடியோ வெளியாகி இருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக பள்ளியின் தலைமை ஆசிரியரை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

# செல்போன் என நினைத்து பேடிஎம் மிஷினை திருடி சென்ற நபர்



நீலகிரி, ஏப்.19

நீலகிரி மாவட்டம் உதகையில் காபி ஹவுஸ் சந்திப்பில் உள்ள பிரபல உணவகத்தில், சாப்பிடுவதற்காக வந்த நபர் ஒருவர், சாப்பிட்டு விட்டு அதற்கான பில் தொகையை செலுத்தி இருக்கிறார். பணம் வாங்கியபின்னர்காசாளர் அவருடைய வேலையை கவனிக்க சென்றுவிட்டார்.

ஆனால், சாப்பிட வந்த நபர் பணம் கொடுத்த பின்னரும், போகாமல் காசாளரின் மேசை அருகேயே நின்றபடி இருந்துள்ளார். அப்போது, மேசையில் இருந்த பேடிஎம் மிஷினை நைசாக எடுத்த அவர், செல்போன் என நினைத்து அதனை திருடி சென்றார். இந்த காட்சிகள் சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியுள்ள நிலையில், அந்த நபரை போலீசார் தேடி வருகின்றனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
19.4.2025

# மனைவி கண்முன்னே தலை துண்டித்து இளைஞர் கொலை; 4 பேர் கைது



தென்காசி, ஏப்.19

தென்காசி மாவட்டம் குற்றாலம் அருகே உள்ள காசிமேஜர்புரம் பகுதியைச் சேர்ந்தவர் குமாரசாமி. இவருடைய மகன் குத்தாலிங்கம் (வயது 35). இவருடைய மனைவி தனலட்சுமி. இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர்.

குத்தாலிங்கம் தனது மனைவியின் ஊரான தென்காசி அருகே உள்ள கீழப்புலியூரில் கடந்த 3 மாதங்களாக வசித்து வந்தார். இவர் அப்பகுதியில் கார்மென்ட்ஸ் நிறுவனம் மற்றும் ஜவுளிக்கடை நடத்தி வந்தார். நேற்று மதியம் கீழப்புலியூரில் உள்ள ரேஷன் கடையில் உணவுப்பொருட்களை வாங்குவதற்காக குத்தாலிங்கம், மனைவி தனலட்சுமி சென்றனர். ரேஷன் கடையில் பொருட்கள் வாங்குவதற்காக குத்தாலிங்கம் வரிசையில் நின்றார்.

அப்போது அப்பகுதியில் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் பதுங்கியிருந்த 4 பேர் கொண்ட மர்மகும்பல் திடீரென்று ரேஷன் கடைக்குள் பாய்ந்து சென்றது. அங்கிருந்த குத்தாலிங்கத்தை மர்மநபர்கள் சுற்றி வளைத்து அரிவாளால் சரமாரியாக வெட்டினர்.

இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த மனைவி தனலட்சுமி கூச்சலிட்டவாறு தடுக்க முயன்றார். ஆனாலும் மர்மநபர்கள் குத்தாலிங்கத்தை சரமாரியாக வெட்டினர். இதில் பலத்த காயமடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தார். பின்னர் அந்த கும்பல் மோட்டார் சைக்கிள்களில் காசி மேஜர்புரம் அம்மன் கோவில் முன்பு குத்தாலிங்கத்தின் தலையை வீசிச் சென்றது. பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து தென்காசி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே துணை போலீஸ் சூப்பிரண்டு தமினியன், இன்ஸ்பெக்டர் ராபர்ட் ஜெயின் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

காசிமேஜர்புரம் அம்மன்கோவில் முன்பிருந்த குத்தாலிங்கத்தின் தலையையும், கீழப்புலியூர் ரேஷன்கடையில் இருந்த அவரது உடலையும் போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

முதல்கட்ட விசாரணையில், காசிமேஜர்புரத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு திருமண விழாவில் டிஜிட்டல் பேனர் வைப்பது தொடர்பாக ஏற்பட்ட தகராறில், அம்மன் கோவில் முன்பாக பட்டுராஜ் என்ற வாலிபர் கொலை செய்யப்பட்டார். இதில் குத்தாலிங்கத்தின் தம்பிக்கு தொடர்பு இருப்பதாக கூறப்பட்டது. எனவே பட்டுராஜ் கொலைக்கு பழிக்குப்பழியாக குத்தாலிங்கத்தை கொலை செய்து, பட்டுராஜ் உடல் கிடந்த இடத்திலேயே குத்தாலிங்கத்தின் தலையை வீசிச் சென்றிருக்கலாம் என்று போலீசார் தெரிவித்தனர். கொலையாளிகளை பிடிப்பதற்காக போலீசார் தனிப்படை அமைத்து வலைவீசி தேடி வந்தனர்.

இந்நிலையில் இளைஞர் தலை துண்டித்து கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக, காசிமேஜர்புரத்தை சேர்ந்த 4 பேரை கைது செய்து குற்றாலம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மனைவி கண்முன்னே இளைஞர் தலை துண்டித்து கொலை செய்யப்பட்ட பயங்கர சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

# வருங்கால முதல்அமைச்சர் நயினார் நாகேந்திரன் என ஒட்டப்பட்ட போஸ்டரால் பரபரப்பு




நெல்லை, ஏப்.19

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு (2026) நடைபெற உள்ளது. சட்டசபை தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்களை தமிழக அரசியல் கட்சிகள் முழுவீச்சில் தொடங்கி விட்டன. ஆளும் கட்சியான திமுக சட்டசபை தேர்தல் பணியை தொடங்கிவிட்டது. அதேவேளையில் பிரதான எதிர்க்கட்சியான அதிமுகவும் கட்சி பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளது. புதிதாக கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய்யும், அதேபோல் நாம் தமிழர் கட்சியும் தேர்தல் பணிகளை தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையில், வருகிற சட்டசபை தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணி அமைத்து போட்டியிடும் சென்னையில் மத்திய மந்திரி அமித்ஷா அண்மையில் அறிவித்தார். மேலும் 'எடப்பாடி பழனிசாமி தலைமையில் தேர்தலை சந்திப்போம் என்றும் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமையும் என்றும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து திமுகவை வீழ்த்தவே பாஜகவுடன் கைகோர்த்தோம் என்றும் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இல்லை என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்தார். இது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில், பாஜக மாநில தலைவராக பொறுப்பேற்றுள்ள நயினார் நாகேந்திரனுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் செட்டிக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அம்மா. எஸ். செல்வகுமார் பெயரில் நெல்லையில் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில், "பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவராக பொறுப்பேற்றுள்ள 'வருங்கால முதல்வரே!' வாழ்த்துகிறேன்" என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. இது அதிமுகபாஜக கூட்டணி இடையே சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரூ.8 கோடி மதிப்புள்ள போதைப்பொருளை கடத்த முயன்றவர் கைது



புதுக்கோட்டை, ஏப்.19

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த லாரன்ஸ் என்பவர் போதைப் பொருள் கடத்தலில் மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அவரை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுனர்.

இந்த நிலையில் அவர் நாகையில் இருந்து புதுக்கோட்டை வழியாக ராமநாதபுரத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரை புதுக்கோட்டை அருகே மடக்கிய மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார், அவரது காரை சோதனை செய்தனர். அதில், ரூ.8 கோடி மதிப்பிலான 95 கிராம் மெத்தபெட்டமைன் போதைப் பொருள் இருந்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து போதைப் பொருளை பறிமுதல் செய்த போலீசார் அவரை கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்து ரூ.2 லட்சம் ரொக்கப்பணத்தையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், அவர் போதைப்பொருளை இலங்கைக்கு கடத்திச் செல்ல இருந்தது தெரியவந்தது. அவரை சிறையில் அடைத்த போலீசார், இந்த சம்பவத்தில் தொடர்புடைய நபர்களை தேடி வருகின்றனர்.

# மேல்பாதி திரெளபதி அம்மன் கோவில் திறப்பு பட்டியலின மக்கள் வழிபாடு



விழுப்புரம், ஏப்.19

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம் மேல்பாதி கிராமத்தில் உள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் கோவில் உள்ளது. இந்தகோவிலில் கடந்த 2023ம் ஆண்டு பட்டியலின மக்கள் வழிபாடு செய்வதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதை தொடர்ந்து இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து கோவிலுக்கு சீல் வைக்கப்பட்டது. இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டிலும் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு மேல்பாதி திரௌபதி அம்மன் கோவிலில் அனைத்து தரப்பு மக்களும் சாமி தரிசனம் செய்யலாம் என்றும் கோவிலைச் சுற்றி சிசிடிவி கேமராக்களை பொருத்தி கண்காணிக்கவும் உத்தரவிட்டது. இந்த நிலையில், சென்னை ஐகோர்ட்டு உத்தரவை தொடர்ந்து, சுமார் 22 மாதங்களுக்கு பிறகு மேல்பாதி திரௌபதி அம்மன் கோவில் போலீஸ் பாதுகாப்புடன் இன்று திறக்கப்பட்டது. நீண்ட நாட்களுக்கு பின்னர் கோவில் திறக்கப்பட்டதால் ஏராளமான பட்டியல் சமூக மக்கள் அம்மனை வழிபாடு செய்து வருகின்றனர். இதனால் பட்டியலின மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எஸ்.பி. சரவணன் தலைமையில் 300க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மோகன்லாலின் எம்புரான் 2 ஓ.டி.டி ரிலீஸ் தேதி அறிவிப்பு




மோகன்லால் நடிப்பில், மலையாள நடிகர் பிருத்விராஜ் இயக்கத்தில் கடந்த 2019ம் ஆண்டு வெளியான 'லூசிபர்' படத்தின் 2ம் பாகமாக உருவான 'எல் 2 எம்புரான்' கடந்த 27ம் தேதி வெளியானது. மஞ்சுவாரியர், டோவினோ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இப்படம் வசூல் ரீதியாக நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள சில காட்சிகள் 2002 குஜராத் கலவரத்தை நினைவுபடுத்தும் விதமாக இருப்பதாகவும் வகுப்புவாத பிரிவினையைத் தூண்டுவதாகவும் சர்ச்சை எழுந்தது. அதனை தொடர்ந்து 17 சர்ச்சைக்குரிய காட்சிகளை நீக்கி, படத்தின் நேரத்தில் 2 நிமிடங்கள் குறைக்கப்பட்டு, வில்லனின் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

'எல் 2 எம்புரான்' திரைப்படம் 5 நாட்களில் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் 5 நாட்களில் ரூ. 200 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது. படம் சர்ச்சையில் சிக்கினாலும் வசூலில் அதிவேகமாக ரூ. 250 கோடி வசூல் செய்த மலையாள படம் என்ற சாதனையை படைத்துள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற 24ந் தேதி ஜியோ ஹாட்ஸ்டார் ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது.

# டெல்லியில் இம்மாத இறுதியில் அஜித் குமாருக்கு பத்ம பூஷன் விருது




பத்ம விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படுவது வழக்கம். பத்ம விருதுகள் இந்தியா அரசால் வழங்கப்படும் விருதுகளில் ஒன்றாகும். இந்த விருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன.

பொது சேவை மற்றும் முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களை கவுரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த சூழலில் 2025ம் ஆண்டுக்கான பத்மபூஷன் விருதுகளை மத்திய அரசு கடந்த ஜனவரி 25ம் தேதி அறிவித்தது. இதன்படி தமிழகத்தை சேர்ந்த 3 பேருக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டது. அதில் நடிகர் அஜித்குமார், நடிகையும் பரதநாட்டிய கலைஞருமான ஷோபனா சந்திரகுமார், தொழிலதிபர் நல்லி குப்புசாமி ஆகியோருக்கு மத்திய அரசு பத்மபூஷன் விருது அறிவித்திருந்தது. மேலும் தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர் வேலு ஆசான், கிரிக்கெட் வீரர் அஸ்வின் உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் டெல்லியில், இம்மாத இறுதியில் நடைபெறும் பத்ம விருதுகள் வழங்கும் விழாவில் அஜித் குமாருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட உள்ளது. நடிகர் அஜித் குமார் ஜனாதிபதி திரவுபதி முர்மு கையால் பத்ம பூஷன் விருதை பெற உள்ளார் பத்மபூஷன் விருதுகள்: பத்ம பூஷன் அறிவிக்கப்பட்ட 19 பேரில் 3 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். 1. நல்லி குப்புசாமி 2. கலைத் துறையில் அஜித் குமார் 3. சோபனா சந்திரசேகர் பத்ம ஸ்ரீ விருதுகள்: பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்ட 113 பேரில் 10 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். 1. கலைத்துறையில் குருவாயூர் துரை, 2. புரிசை கண்ணப்பா சம்பந்தன், 3. ராதாகிருஷ்ணன் தேவசேனாதிபதி, 4. வேலு ஆசான், 5. விளையாட்டுத் துறையில் அஸ்வின், 6. தொழில்துறையில் ஆர்.ஜி.சந்திரமோகன், 7. கல்வித்துறையில் லட்சுமிபதி ராமசுப்பையர், 8. சீனி விஸ்வநாதன், 9. அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவில் ஏ.டி. ஸ்ரீனிவாஸ், 10. மற்றவை சமையல் (Others culinary) பிரிவில் தாமோதரன் மேலும், புதுச்சேரியைச் சேர்ந்த தட்சணாமூர்த்திக்கு கலைப்பிரிவில் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட உள்ளது.

# வடிவேலு மீது எனக்கு வருத்தம் இயக்குனர் சுந்தர்.சி

கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு சுந்தர் சி மற்றும் வடிவேலுவின் கூட்டணி இணைந்துள்ளது. இவர்களது கூட்டணியில் உருவாகியுள்ள படத்திற்கு 'கேங்கர்ஸ்' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்படம் வருகிற 24ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதில் கேத்ரின் தெரசா, வாணி போஜன் மற்றும் பலர் நடித்துள்ளனர். சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்த திரைப்படத்தை தமிழகம் முழுவதும் சுமார் 500 தியேட்டர்களில் வெளியிட திட்டமிட்டுள்ளனர். இப்படத்தின் ரிலீஸ் தேதி நெருங்கி வருவதால், பிரீ ரிலீஸ் நிகழ்ச்சி நேற்று சென்னையில் நடைபெற்றது. அதில் பேசிய சுந்தர் சி, "நானும், வடிவேலும், இணைந்து கிட்டத்தட்ட 20 வருடங்களாகப் பணியாற்றி வருகிறோம். 2003ல் வடிவேலுடன் எனது பயணத்தைத் தொடங்கினேன்.ஒரு நடிகர் இப்படி நடிக்க முடியுமா? என்று இன்னும் அவரைப் பார்த்து வியந்துக்கொண்டிருக்கிறேன். படத்தில் ஒரு சாதாரணக் காட்சியாக இருந்தால் கூட அதற்கு அவர் கொடுக்கும் எக்ஸ்பிரஷன் அற்புதமாக இருக்கும். நடிப்பில் லெஜண்ட் என்று சொன்னால் அது வடிவேல் சார்தான். ஒரு காட்சிக்கு நான் 10 சதவிகிதம் யோசித்தால் போதும் மீதி 90 சதவிகிதம் அவரே நடிப்பில் படத்தை சிறப்பாக்கி விடுவார். அதனால் எல்லா நடிகர்களுக்கும் இவர் மாஸ்டர் க்ளாஸ் என்று சொல்லலாம். ஒரு மனிதன் இத்தனை வருடங்களாக சிரிக்க வைப்பது என்பது சாதாரண விஷயம் கிடையாது. வடிவேலு மீது எனக்கு ஒரே ஒரு வருத்தம் இருந்தது. அது அவர் இடையில் கொஞ்சம் நடிக்காமல் இருந்ததுதான். அந்த கேப்பில் அவர் நடித்திருந்தால் எத்தனை படங்களை நாம் ரசித்திருந்திருப்போம். இனிமேல் அவரைப் பார்த்து சிங்கம் களத்தில் இறங்கிவிட்டது என எல்லோரும் சொல்ல வேண்டும்" என்றார். தொடர்ந்து பேசிய நடிகர் வடிவேலு, தங்கள் இருவரையும் யாரோ பிரிந்துவிட்டதாக நகைச்சுவையாகக் கூறினார்.

# பார்சிலோனா ஓபன் டென்னிஸ்: காலிறுதிக்கு முன்னேறிய அல்காரஸ்



ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான டென்னிஸ் தொடரில் முன்னணி வீரர்கள் பங்கேற்று உள்ளனர். கடந்த 12ந்தேதி தொடங்கிய இந்தத் தொடர் வரும் 20ந்தேதி வரை நடைபெற உள்ளது.

இந்நிலையில், இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் முன்னணி வீரர் கார்லஸ் அல்காரஸ், செர்பியா வீரர் லாஸ்லோ ஜெரே மோதினர். இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 62, 64 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல். 2025: மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற 33வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான மும்பை இந்தியன்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின.

இதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஹார்திக் பாண்ட்யா பந்துவீச்சைத் தேர்வு செய்தார். இதன்படி சன்ரைசர்ஸ்ஐதராபாத்அணியின்சார்பில்முதலாவதாகஅபிஷேக்சர்மாமற்றும்டிராவிஸ்ஹெட் ஆகியோர்களமிறங்கினர்.

முதல் ஓவரின் முதல் பந்திலே அபிஷேக் சர்மா கொடுத்த கேட்சை பிடிக்க மும்பை அணியினர் தவறினர். அடுத்து கொடுத்த மற்றொரு கேட்சையும் மும்பை வீரர்கள் தவறவிட்டநிலையில் அதை பயன்படுத்தி அவர் அதிரடியாக ஆடத்தொடங்கினார்.

இந்நிலையில் சிறப்பாக ஆடி வந்த அபிஷேக் சர்மா 40 (28) ரன்களில் கேட்ச் ஆனார். அடுத்து களமிறங்கிய இஷான் கிஷன் 2 ரன்னில் வெளியேற, அவரைத்தொடர்ந்து ஓரளவு தாக்குப் பிடித்த டிராவிஸ் ஹெட் 28 (29) ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக நிதிஷ் குமார் ரெட்டியுடன், ஹென்ரி கிளாசன் ஜோடி சேர்ந்தார். ஓரளவு ரன்கள் சேர்த்த இந்த ஜோடியில் நிதிஷ் குமார் ரெட்டி 19 ரன்களில் கேட்ச் ஆனார். அடுத்து அதிரடி காட்டி வந்த ஹென்ரி கிளாசன் 37 (28) ரன்களில் ஆட்டமிழந்தார். முடிவில் அதிரடி காட்டிய அன்கிட் வர்மா 18 (8) ரன்களும், பேட் கம்மின்ஸ் 8 (4) ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 162 ரன்கள் எடுத்தது.

மும்பை அணியின் சார்பில் அதிகபட்சமாக வில் ஜாக்ஸ் 2 விக்கெட்டுகளும், ஹார்திக் பாண்ட்யா, பும்ரா மற்றும் போல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதனைத் தொடர்ந்து 163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ரயான் ரிக்கெல்டன் ரோகித் சர்மா ஜோடி அணிக்கு நல்ல தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர். 3 சிக்ஸர்களை விளாசிய ரோகித் சர்மா, 26 ரன்களில் கேட்ச் ஆனார்.

ரியான் ரிக்கெல்டன் 31 ரன்களும், வில் ஜாக்ஸ் 36 ரன்களும் சேர்த்த நிலையில், சூர்யகுமார் யாதவ் அதிரடியாக விளையாடி 15 பந்துகளில் 26 ரன்கள் எடுத்தார். கேப்டன் ஹார்திக் பாண்ட்யா 9 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 21 ரன்கள் விளாசினார். நிதானமாக ஆடிய திலக் வர்மா 21 ரன்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

17வது ஓவரின் முடிவில் மும்பை அணி வெற்றி பெற 2 ரன்கள் மட்டுமே தேவை என்ற நிலையில், 18வது ஓவரை வீசிய ஈஷான் மலிங்கா 1 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து ஹார்திக் பாண்ட்யா மற்றும் நமன் திர் ஆகிய இருவரின் விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். இதையடுத்து 19வது ஓவரின் முதல் பந்தில், சீஷன் அன்சாரி வீசிய பந்தை திலக் வர்மா பவுண்டரிக்கு விரட்டி ஆட்டத்தை வெற்றியுடன் நிறைவு செய்தார். இறுதியில் 18.1 ஓவர்களில் மும்பை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 166 ரன்கள் எடுத்து, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஐதராபாத் அணியில் அதிகபட்சமாக பேட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுகளும், ஈஷான் மலிங்கா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

# 2025 தடகள போட்டிகள்; வெற்றியுடன் தொடங்கிய நீரஜ் சோப்ரா

தென்ஆப்பிரிக்காவின் பாட்செப்ஸ்ட்ரூம் நகரில் 2025ம் ஆண்டுக்கான தடகள போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், ஈட்டி எறிதலுக்கான போட்டி மெக்ஆர்தர் ஸ்டேடியத்தில் இன்று நடந்தது. இதில், ஒலிம்பிக்கில் 2 முறை பதக்கம் வென்றவரான நீரஜ் சோப்ரா வெற்றியுடன் தொடங்கியுள்ளார். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு, டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்கு தகுதி பெறுவதற்கான போட்டி இந்த ஸ்டேடியத்திலேயே நடந்தது. இதில், அவர் தகுதி பெற்றார். இந்நிலையில், நடந்த போட்டியில் உள்ளூர்காரர்களான டவ் ஸ்மிட் மற்றும் டன்கன் ராபர்ட்சன் ஆகிய இருவரையும் பின்னுக்கு தள்ளி முன்னிலை பெற்றார். இந்த போட்டியில், ஸ்மிட் அதிக அளவாக 82.44 மீட்டர் தொலைவுக்கு ஈட்டி எறிந்துள்ளார். நடப்பு ஆண்டுக்கான ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில், 80 மீட்டர் தொலைவுக்கு கூடுதலாக ஈட்டி எறிந்த 6 பேரில் நீரஜ் மற்றும் ஸ்மிட் இருவரே உள்ளனர். நீரஜ் சோப்ராவின், தனிப்பட்ட சிறப்பான ஈட்டி எறிதல் மற்றும் இந்திய தேசிய சாதனையானது, 89.94 மீட்டர் என்ற அளவில் உள்ளது. 2022ம் ஆண்டு ஸ்டாக்ஹோம் டையமண்ட் லீக் போட்டியில் இந்த சாதனையை அவர் ஏற்படுத்தினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.